## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை திரு.லி.மதுபாலன் இ.ஆ.ப.,

ந.க.எண் எப்1/587/2026/வா.கு.அ.3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
நாள் 06.03.2026

பொருள்: குடியிருப்பு மனை உட்பிரிவு – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம் 3 (திருவெறும்பூர் மண்டலம்), கொட்டப்பட்டு கிராமம், பழைய புல எண் 53/1 பாகம், புதிய வார்டு AF, பிளாக் எண் 29, நகரளவு எண் 9/3–ல் கட்டுப்பட்ட 1560 ச.மீ. (0.38 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில், புதிதாகக் குடியிருப்பு மனை உட்பிரிவு அமைக்க தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டது – அங்கீகாரம் செய்து உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை:
1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் உத்தரவு SWP/6GNHILB6/59804/2026/2026/TCP, நாள் 03.02.2026
2. ஆணையர் அவர்களின் ஒப்புதல், நாள் 03.03.2026

***********

<u>உத்தரவு</u>

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 3 (திருவெறும்பூர் மண்டலம்), கொட்டப்பட்டு கிராமம், பழைய புல எண் 53/1 பாகம், புதிய வார்டு AF, பிளாக் எண் 29, நகரளவு எண் 9/3–ல் கட்டுப்பட்ட 1560 ச.மீ. (0.38 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் கட்டுப்பட்ட புதிய குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு. ம.வ. / ந.ஊ.இ.இ. (திமா) எண் 12/2026 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதலும், மேற்படி குடியிருப்பு மனை உட்பிவு வரைபடத்திற்கு 12/2026 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வுத்தரவில் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள், வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கீழ்க்காணும் கூடுதல் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்கண்ட அனுமதி உத்தரவு அங்கீகரிக்கப்படுகிறது.

<u>கூடுதல் நிபந்தனைகள்</u>

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண் SWP/6GNHILB6/59804/2026/2026/TCP, நாள் 03.02.2026ம் தேதிய செயலாணையில் கண்டுள்ள குடியிருப்பு மனை உட்பிரிவு நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.
2. குடியிருப்பு மனை உட்பிரிவில் கட்டடம் கட்டும் முன் சாலை மட்டத்திற்கு மனையில் மண் நிரப்பி உயர்த்த வேண்டும்.
3. குடியிருப்பிற்காக ஒதுக்கப்பட்ட மனையில் குடியிருப்புக் கட்டடம் மட்டுமே கட்டப்பட வேண்டும். கடைக்காக ஒதுக்கப்பட்ட மனையில் கடைக் கட்டடம் மட்டுமே கட்டப்பட வேண்டும். மாநகராட்சி சட்டப்படி உரிய விண்ணப்பங்கள் சமர்ப்பித்து கட்டட மற்றும் திட்ட அனுமதி பெற்ற பின்பே கட்டடம் கட்டப்பட வேண்டும்.
4. குடியிருப்பு மனை உட்பிரிவு வரைபடத்திலுள்ள அளவுகளின்படி தான் மனைகள் கிரயம் செய்யப்பட வேண்டும்.

-2-

5. மனை அபிவிருத்தி காலத்தில் மழைநீர் வடிகால் அமைப்புகளைத் தவறாமல் அமைக்க வேண்டும்.
6. குடியிருப்பு மனை உட்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்ட நாளிலிருந்து உரிய அனுமதி பெற்று கட்டடம் கட்டும் வரை காலிமனை வரி செலுத்தப்பட வேண்டும்.
7. குடியிருப்பு மனை உட்பிரிவில் மழைநீர் வடிகால் அமைப்புகள், மாநகராட்சி பொறியாளர்களின் ஆலோசனைப்படி அமைக்கப்பட வேண்டும்.
8. மாநகராட்சியின் அனுமதியின்றி எவ்வித மாறுதலோ மற்றும் பாதையினை மறித்து கதவோ (Gate) அமைக்கக் கூடாது.
9. குடியிருப்பு மனை உட்பிரிவு வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 7.20 மீட்டர் அகலமுள்ள சாலை, குடிநீர்க் குழாய்கள், தெருவிளக்குகள் மற்றும் புதைவடிகால் வசதிகள் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆணையருக்காக
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

06/03/2026

பெறுநர்

திரு.T.R.அரவிந்தன்,
18/3 – கார்மெல் கார்டன் ரோடு,
இராமலிங்க நகர் 5வது கிராஸ் (மே) விரிவு,
திருச்சி – 620 003.

நகல் – உதவி ஆணையர், வார்டு குழு அலுவலகம்–3, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி